க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
கணக்கீடு I
நேரம் : 2 மணித்தியாலம்

01. கம்பனியொன்றின் நிதிவருடம் 31.03.2012இல் முடிவடைந்தது. இக்கம்பனியானது 01.04.2011இல் மீள் விற்றலுக்காக ரூபா 40,000க்கு பொருட்களைக் கடனுக்கு கொள்வனவு செய்ததுடன் ரூபா 20,000 கிரயமான தளபாடங்களைக் காசுக்குக் கொள்வனவு செய்துள்ளது. குறித்த நிதி வருடத்தில் ரூபா 2,000 கழிவு நீக்கி மீள் விற்றலுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தின் 50% காசோலை மூலம் கொடுத்து தீர்க்கப்பட்டதுடன் உரிமையாளர் ரூபா 1,000 கிரயமான பொருட்களை சொந்த உபயோகத்துக்காக எடுத்துள்ளார். தளபாடங்களுக்கு 10% பெறுமானத் தேய்விடப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள சமன்பாடுகளில் எது கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தைக் காட்டும்?

	சொத்து	=	உரிமையாண்மை	+	பொறுப்பு
1.	+ 60,000		- 2,000	+	62,000
2.	+ 59,000		-1,000	+	60,000
3.	+ 19,000		-1,000	+	20,000
4.	+ 40,000		-2,000	+	42,000
5.	+ 39,000		-1,000	+	40,000

(……..)

02. சாந்தன் வியாபார நிறுவனத்தில் பரீட்சை மீதியை பரிசீலனை செய்தபோது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவையாவன
- ரூபா 5,000 விற்பனை ஒன்று ஏடுகளிலிருந்து முற்றாகத் தவறவிடப்பட்டிருந்தது.
- கொடுத்த வாடகை ரூபா 5,000 பெற்ற வாடகை கணக்கில் கொண்டு சென்று ரூபா 4,000 செலவில் பதியப்பட்டது.
- வங்கி மேலதிகப் பற்று மீதி ரூபா 3,000 பரீட்சை மீதியில் ஓர் வரவு மீதியாகச் சேர்க்கப் பட்டிருந்தது.
- தளபாடக் கொள்வனவு ரூபா 5,000 கொள்வனவுக் கணக்கில் கொண்டு சென்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

இவற்றின் காரணமாக தொங்கல் கணக்கில் காணப்படும் மீதியையும், இத் தவறுகள் தேறிய இலாபத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினையும் காட்டுகள.

	தொங்கல் கணக்கு மீதி	தேறிய இலாப தாக்கம்
1.	ரூபா 3,000 செலவு	ரூபா 1,000 அதிகரிக்கும்
2.	ரூபா 9,000 வரவு	ரூபா 10,000 அதிகரிக்கும்
3.	ரூபா 6,000 வரவு	ரூபா 9,000 குறையும்
4.	ரூபா 15,000 செலவு	ரூபா 1,000 அதிகரிக்கும்
5.	ரூபா 3,000 வரவு	ரூபா 1,000 குறையும்

(…….)

03. வரையறுத்த தீபன் கம்பனி ஒவ்வொரு ஆண்டிறுதியிலும் கடன்பட்டோர் மீதியில் நிலையானதொரு சதவீதத்தினைப் பின்பற்றி ஐயக்கடன் ஏற்பாட்டைப் பேணி வருகிறது.

31.03.2011இல் கடன்பட்டோர் மீதி ரூபா 200,000
31.03.2011இல் ஐயக்கடன் ஏற்பாட்டு மதி ரூபா 16,000

2011/2012 நிதிவருட காலத்தில் கடன்பட்டோர் தொடர்பான நடவடிக்கைகள் வருமாறு

கடன்விற்பனைகள்	ரூபா 400,000
விற்பனைத் திரும்பல்	ரூபா 5,000
கொடுத்த கழிவு	ரூபா 10,000
பதிவழித்த அறவிடமுடியாக் கடன்	ரூபா 15,000
கடன்பட்டோர் தந்த காசு	ரூபா 320,000

31.03.2012இற்கான ஐந்தொகையில் ஐயக்கடன் தொகையாகக் காட்டப்படும் தொகை யாது?

1. ரூபா 16,000
2. ரூபா 32,000
3. ரூபா 48,000
4. ரூபா 20,000
5. ரூபா 25,000

(…….)

04. வாசன் இலாப நோக்கமற்ற நிறுவனமானது ஒரு நூல் நிலையம் அமைப்பதற்காக ரூபா 300,000 விசேட நன்கொடையாகப் பெற்றுக்கொண்டது. இதில் ரூபா 200,000 நூல் நிலையம் அமைப்பதற்காகப் பயன்படுத்திக் கொண்டது. மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் பின் கட்டிட கணக்கு, திரண்ட நிதிக் கணக்கு, விசேட நன்கொடைக் கணக்கு போன்றவற்றில் காணப்படும் மீதிகள் முறையே எத்தொகைகளைக் காட்டுகின்றன.

	கட்டிடக் கணக்கு	திரண்ட நிதிக் கணக்கு	விசேட நன்கொடைக் கணக்கு
1.	ரூபா 300,000	ரூபா 100,000	ரூபா 100,000
2.	ரூபா 100,000	ரூபா 200,000	ரூபா 300,000
3.	ரூபா 200,000	ரூபா 100,000	ரூபா 300,000
4.	ரூபா 200,000	ரூபா 200,000	ரூபா 100,000
5.	ரூபா 300,000	ரூபா 300,000	ரூபா 300,000 (…….)

05. அன்பு, அறிவு, பண்பு பங்குடமை ஒன்றின் பங்காளர்கள் 31.03.2012இல் முடிவுற்ற ஆண்டுக்கு பங்குடமை உழைத்த தேறிய இலாபம் பங்காளரிடையே சமனாகப் பகிரப்பட்ட பின் மூலதனக் கணக்கு மீதிகள் முறையே ரூபா 350,000 ரூபா 250,000, ரூபா 150,000 ஆக இருந்தது. 01.04.2011இல் பங்குடமையின் தேறிய சொத்துக்கள் ரூபா 600,000 ஆகக் காணப்பட்டது. 31.03.2011வரை பங்காளரிடையே உடன்படிக்கை ஏதும் இருக்கவில்லை. 01.04.2011 தொடக்கம் பின்வரும் உடன்படிக்கை பங்காளரிடையே ஏற்பட்டிருந்தது.

- வருட ஆரம்ப மூலதன மீதிகளுக்கு 10% வட்டி
- பங்காளர் அன்பு, அறிவு இற்கு வருடாந்த சம்பளம் முறையே ரூபா 20,000 ரூபா 10,000 அனுமதிக்கப்படும். மீதியாக உள்ள இலாபம் சமனாக பங்காளரிடையே பகிரப்படும்.

31.03.2012இல் முடிவுற்ற ஆண்டுக்கு பங்காளர் ஒவ்வொருவரினதும் பங்குடமையிலிருந்தான வருமானம் முறையே

1. ரூபா 50,000 , 50,000 , 50,000
2. ரூபா 80,000 , 40,000 , 30,000
3. ரூபா 80,000 , 60,000 , 25,000
4. ரூபா 60,000 , 60,000 , 30,000
5. ரூபா 70,000 , 50,000 , 30,000 (…….)

06. நடைமுறையல்லாத சொத்தொன்று 01.04.2012இல் ரூபா 125,000க்கு விற்பனை செய்யப்பட்டது. இதனால் நிறுவனத்திற்கு கிடைத்த இலாபம் ரூபா 25,000 ஆகும். இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான கூற்றுக்கள் பின்வருமாறு

A - விற்பனை செய்யப்பட்ட சொத்தின் கிரயப் பெறுமதிக்கும் திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுத் தொகைக்கும் இடையேயான வேறுபாட்டுத் தொகை ரூபா 100,000 ஆகும்.

B - குறித்த சொத்து விற்பனை செய்யப்பட்ட பெறுவனவுத்தொகை சொத்தின் ஏட்டுப் பெறுமதியினை விடவும் ரூபா 25,000 மிகையானதாகும்.

C - குறித்த விற்பனை செய்யப்பட்ட சொத்து விற்பனை செய்யப்படும் வரை நேர்கோட்டு முறையில் 10%மான பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு வந்துள்ளது. இத் தேய்வு முறை குறைந்து செல்லும் மீதி முறையில் 10% அக இருந்திருப்பின் தற்போதைய இலாபம் குறையும்.

D - மேற்படி சொத்து விற்றுக் கிடைத்த காசு ரூபா 25,000ம் ஒரு மூலதனப் பெறுவனவாகும்.

மேற்படி கூற்றுகளில் சரியானவை

1. A, B, C 2. A, B, D 3. B, C, D
4. C, D 5. A, D (…….)

07. வரையறுத்த சுரங்கா கம்பனியின் 31.03.2012இல் கூறப்பட்ட பங்கு மூலதனம்

ஒவ்வொன்றும் 20/= ஆன 100,000 சாதாரண பங்குகள்
ஒவ்வொன்றும் 30/= ஆன 200,000 சாதாரண பங்குகள்
ஒவ்வொன்றும் 40/= ஆன 100,000 முன்னுரிமைப் பங்குகள்

முன்னுரிமைப் பங்குகள் பங்கொன்று ரூபா 8 பங்கு இலாபம் பெறத்தக்கவை

01.04.2012இல் பகிரப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒதுக்கங்கள் மூலதனமாக்கப்பட்டது. 100,000 சாதாரண பங்குகள் ஒவ்வொன்றினதும் நியாயமான பெறுமதி 50/= ஆன சாதாரண பங்குகளாகும். உபகாரப் பங்கு வழங்கப்பட்ட பின்னர் கம்பனியின் கூறப்பட்ட மூலதனப் பெறுமதியையும், பங்குகளின் உரிமையில் ஏற்படும் விளைவையும், சாதாரண பங்கு ஒன்றின் நிறையளித்த சராசரிப் பெறுமதியையும் காட்டுவது

1. ரூபா 8,000,000, அதிகரிப்பு, ரூபா 20
2. ரூபா 17,000,000, மாற்றமில்லை, ரூபா 32.50
3. ரூபா 12,000,000, அதிகரிக்கும், ரூபா 20
4. ரூபா 17,000,000, அதிகரிக்கும், ரூபா 44
5. ரூபா 13,000,000, மாற்றமில்லை, ரூபா 32.50 (…….)

08. வேலன் நிறுவனத்தின் 2011 டிசம்பர் மாதத்துக்கான பின்வரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- டிசம்பர் 31 இல் வங்கிக்கூற்றின்படியான மேலதிகப் பற்று மீதி ரூபா 22,000
- வைப்பு செய்யப்பட்டு இன்றும் வசூலிக்கப்படாத காசோலை ரூபா 4,000
- வழங்கப்பட்டும் இன்னமும் மாற்றப்படாத காசோலை ரூபா 10,000
- காசேட்டில் பதியப்படாத வங்கிக் கட்டணம் ரூபா 3,000
- காசேட்டில் பதிவு இடம்பெறாத மறுக்கப்பட்ட காசோலை ரூபா 6,000

மேற்கூறிய வேறுபாடுகள் சீராக்கப்பட்ட பின்னர் காசேட்டில் வங்கி மேலதிகப் பற்று மீதி யாது?

1. ரூபா 25,000
2. ரூபா 33,000
3. ரூபா 17,000
4. ரூபா 28,000
5. ரூபா 16,000 (………)

09. குறித்த ஓர் கம்பனியின் வருடாந்த கேள்வி 40,000 அலகுகள் கட்டளை ஒன்றுக்கான செலவு ரூபா 100, ஒரு அலகுக்கான கிரயம் ரூபா 20, பராமரிப்புச் செலவு அலகுக் கிரயத்தில் 10% ஆகும். வழங்கப்பட வேண்டிய கட்டளைகளின் எண்ணிக்கை யாது?
1. 20,000
2. 200
3. 400
4. 20
5. 40 (………)

10. முதலீட்டு மதிப்பீட்டு நுட்பங்களில் கழிவீட்டு நுட்பமாகக் கொள்ளக்கூடியது
A - திரும்ப செலுத்தும் காலமுறை
B - தேறிய நிகழ்காலப் பெறுமதி முறை
C - கணக்கீட்டு வருவாய் விகிதம்

1. A மட்டும்
2. B மட்டும்
3. C மட்டும்
4. A, B மட்டும்
5. A, C மட்டும் (……..)

11. கம்பனியொன்றின் 31.03.2012 முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன. 31.03.2011இல் உள்ளவாறான மொத்த சொத்துக்கள், பொறுப்புக்கள் முறையே ரூபா 1,000,000 , ரூபா 600,000 மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்கள் ரூபா 100,000 மாகவும் இருந்தது.
2012 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வரிகழித்த பின் தேறிய இலாபம் ரூபா 225,000 ஆகும். செலுத்திய இடைக்கால பங்கிலாபம் ரூபா 150,000 ஆகும்.
31.03.2012 இல் உள்ளவாறான உரிமையாண்மைத் தொகை யாது?
1. ரூபா 625,000
2. ரூபா 325,000
3. ரூபா 475,500
4. ரூபா 175,000
5. ரூபா 400,000 (………)

12. உற்பத்தி பொருளொன்றுடன் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

உற்பத்திக்கிரயம்	ரூபா 140,000
ஆரம்ப மூலப்பொருள் இருப்பு	ரூபா 18,000
நேர்க்கூலி	ரூபா 42,000
நேர்ச்செலவு	ரூபா 6,000
இறுதி மூலப்பொருள் இருப்பு	ரூபா 20,000
பழுதடைந்த மூலப்பொருள் இருப்பு	ரூபா 3,000
குறைவேலை இருப்பில் அதிகரிப்பு	ரூபா 4,000

உற்பத்திக் கிரயத்தில் 70% மூலக்கிரயமாகும். கொள்வனவு செய்த மூலப்பொருளின் பெறுமதி யாது?
1. ரூபா 51,000
2. ரூபா 55,000
3. ரூபா 56,000
4. ரூபா 52,000
5. ரூபா 59,000 (………)

13. துசாந்தன் கம்பனி லிமிட்டெட் ரூபா 600,000த்தினை 2011 ஆகஸ்ட் 01இல் வாடகைக்காக செலுத்தியது. இத்தொகை 2010 ஒக்ரோபர் 01 தொடக்கம் 2012 மே 31 வரையான காலப் பகுதிக்காகும். ஆனால் 2011 ஆகஸ்ட் 01இல் வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும். மாதாந்த வாடகை தொகையானது 100% த்தால் அதிகரிக்கப்பட்டது. 31.12.2011இல் முடிவடைந்த ஆண்டின் வருமானக் கூற்றிலும் 31.12.2011இல் ஐந்தொகையிலும் காட்டப்படும் உருப்படிகள் முறையே.

	வருமானக் கூற்று		ஐந்தொகை	
1.	ரூபா	360,000	ரூபா	150,000
2.	ரூபா	450,000	ரூபா	150,000
3.	ரூபா	340,000	ரூபா	200,000
4.	ரூபா	400,000	ரூபா	200,000
5.	ரூபா	480,000	ரூபா	120,000

(……..)

14. இலாபம் அதிகரிக்கின்றது. உரிமையும் அதிகரிக்கின்றது. இந்த நிகழ்வு பின்வரும் எக்காரணிகளினால் உருவாகின்றது.

1. செலவினம்
2. பொறுப்பு
3. சொத்து
4. மூலதனம்
5. வருமானம் (………)

15. நிதிக்கூற்றுக்களினை தயாரித்தலும் சமர்ப்பித்தலும் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நோக்கம் / நோக்கங்களை பின்வருவனவற்றுள் எது / எவை வெளிப்படுத்தும்

A - விளங்கிக் கொள்ளுதலினை உறுதிப்படுத்துவதற்கு
B - குறித்த வழிகாட்டல்களினை வழங்குவதற்கு
C - தகவல்களின் பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு

1. A மட்டும்
2. A, B மட்டும்
3. A, C மட்டும்
4. B, C மட்டும்
5. A, B, C மட்டும் (……..)

16. வேந்தன் நிறுவனத்தின் 2011 டிசம்பர் மாதத்துக்கான வங்கிக் கணக்கிணக்க கூற்றினை பயிலுனரான கணக்கு உதவியாளர் பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

காசேட்டு வங்கி நிரலின்படி மேலதிகப் பற்று மீதி		18,000
+ வங்கி நேரடியாகச் சேகரித்த பங்கு இலாபம்	2,000	
மாற்றப்படாத காசோலைகள்		
நவம்பர் மாதம் வழங்கியவை	1,500	
டிசம்பர் மாதம் வழங்கியவை	3,000	6,500
		24,500
(-) வசூலிக்கப்படாத காசோலைகள்		
டிசம்பர் மாதம் வைப்புச் செய்தவை	8,000	
வங்கி தவறுதலாக வங்கிக் கூற்றில் வரவு வைத்தது	4,000	(12,000)
டிசம்பர் 31இல் வங்கிக் கூற்றின்படி வங்கிமீதி		12,500

2011 டிசம்பர் 31இல் வங்கிக்கூற்று மீதியானது வங்கி இணக்கக்கூற்று மீதியிலிருந்து வேறுபட்டு காணப்பட்டது. ஐந்தொகையில் 2011 டிசம்பர் 31இல் காட்டப்பட வேண்டிய காசேட்டு வங்கி மீதியும் வங்கிக்கூற்று மீதியும் முறையே

1. ரூபா 18,000 மேலதிகப் பற்று ரூபா 23,500 வரவு மீதி
2. ரூபா 16,000 சாதகம் ரூபா 12,500 செலவு மீதி
3. ரூபா 16,000 வரவு மீதி ரூபா 16,500 வரவு மீதி
4. ரூபா 16,000 மேலதிகப்பற்று ரூபா 23,500 வரவு மீதி
5. ரூபா 18,000 மேலதிகப்பற்று ரூபா 23,500 வரவு மீதி

17. வேலையாட்களுக்கு சம்பளம் கொடுத்தது தொடர்பில் பின்வருவனவற்றுள் எவற்றை நேர்க் கூலியாக வகைப்படுத்த முடியும்.

A - தொழிற்சாலை ஒன்றில் தொலைக்காட்சிப் பெட்டிகளின் பாகங்களைப் பொருத்தும் வேலையில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.

B - தொழிற்சாலையொன்றின் களஞ்சியத்தில் வேலை செய்யும் களஞ்சிய உதவியாளர்கள்

C - கட்டுமானக் கம்பனியொன்றின் கட்டிடத் தொழில் வேலையாட்கள்

D - கணக்காய்வாளர் நிறுவனமொன்றில் வேலை செய்யும் கணினி உதவியாளர்

E - பேக்கரியொன்றின் முகாமையாளர்

1. A, C, D மாத்திரம்
2. A, C மாத்திரம்
3. A, B, C, D மாத்திரம்
4. A,B, C மாத்திரம்
5. B, E மாத்திரம் (……..)

18. பொதுவாக பயன்படுத்தப்படும் சில கணக்குகள் கீழே தரப்பட்டுள்ளன

A - முற்பணமாகச் செலுத்திய விளம்பரம்

B - பெறவேண்டிய முதலீட்டு வருமானம்

C - அட்டுறு காப்புறுதிக் கட்டணம்

D - பெறுமானத் தேய்வு ஏற்பாடு

E - ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடு

F - ஒதுக்கங்கள்

G - வரி ஏற்பாடு

1. சொத்துக்கள் ABD பொறுப்புக்கள் CEG உரிமை F
2. சொத்துக்கள் AB பொறுப்புக்கள் CDEG உரிமை F
3. சொத்துக்கள் ABD பொறுப்புக்கள் CG உரிமை EF
4. சொத்துக்கள் ABDE பொறுப்புக்கள் CG உரிமை F
5. சொத்துக்கள் ABDf பொறுப்புக்கள் CE உரிமை G (………)

19. செல்வன் வியாபாரத்தின் 31.12.2011 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படாமையினால் தொங்கல் கணக்கு உருவாக்கப்பட்டு சமப்படுத்தப்பட்டது. பின்னர் பின்வரும் காரணங்கள் கண்டறியப்பட்டன.

- கொள்வனவுத் திரும்பல் ரூபா 30,000 கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் பதியப்பட்டதுடன் கொள்வனவுத் திரும்பல் கணக்கில் ரூபா 3,000 மட்டும் செலவில் பதியப்பட்டது.
- பெறப்பட்ட பல்லின வருமானங்கள் ரூபா 1,000 காசேட்டில் இருந்து பேரேட்டுக்கு மாற்றப்படவில்லை.
- அலுவலகச் செலவு ரூபா 25,000 அலுவலகச் செலவுக் கணக்கில் ரூபா 27,500 எனப் பதியப்பட்டிருந்தது.

மேற்கூறிய காரணங்களினால் இப்பரீட்சை மீதியில் தொங்கல் கணக்கு

1. வரவுப் பக்கத்தில் ரூபா 29,500 தோன்றியிருக்கும்.
2. செலவுப் பக்கத்தில் ரூபா 31,500 தோன்றியிருக்கும்.
3. வரவுப் பக்கத்தில் ரூபா 30.500 தோன்றியிருக்கும்.
4. செலவுப் பக்கத்தில் ரூபா 30.500 தோன்றியிருக்கும்.
5. செலவுப் பக்கத்தில் ரூபா 36,500 தோன்றியிருக்கும். (……….)

20. ஊழியர் ஒருவருக்கு அறவீடுகள் நீக்கிய பின் காசாக செலுத்திய சம்பளம் ரூபா 9,000 ஆகும். ஊழியர் சேமலாப நிதிக்கு ஊழியரிடமிருந்து 10%மும் வேலை கொள்வோரிடமிருந்து 15%மும் பங்களிப்புச் செய்யப்பட்டது. ஊழியர் சேம இலாப நிதிச் செலவானது

1. ரூபா 1350
2. ரூபா 900
3. ரூபா 1365
4. ரூபா 1500
5. ரூபா 2250 (……….)

21. கடனைத் தீர்க்க நாதன் என்ற கடன்பட்டோன் 10% கழிவுக்கமைய ரூபா 103,500 இனை செலுத்தியதுடன் ஏற்கனவே அவன் 20% வியாபாரக் கழிவில் அப்பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளான். அத்துடன் அவன் கொள்வனவு செய்த நிறுவனம் பெறுமதிசேர் வரி பதிவு பெற்ற நிறுவனமாதலால் 15% பெறுமதி சேர் வரி உள்ளடக்கப்பட்டுள்ளது. குறித்த பண்டத்தின் பட்டியல் விலை யாது?

1. ரூபா 125,000
2. ரூபா 110,000
3. ரூபா 140,000
4. ரூபா 115,000
5. ரூபா 100,000 (……….)

22. குறிப்பிட்டதோர் தினத்தில் வங்கிக் கூற்று செலவு மீதியைக் (சாதக) காட்டுகிறது. ஆனால் காசேடு வங்கி வங்கிமேலதிகப் பற்றைக் காட்டுகிறது. இதற்கான காரணம்
1. வங்கிக்கட்டணம் கணக்கிலடப்படாமை.
2. சமர்ப்பிக்கப்படாத காசோலை
3. வசூலிக்கப்படாத காசோலை
4. நிலையான கட்டளைக் கொடுப்பனவை காசேடு பதியாமை
5. மாற்றப்பட்ட காசோலை (………)

23. கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு மீதி தோன்றக்கூடிய ஒரு சந்தர்ப்பம் யாது?
1. கடனுக்கு கொள்வனவு செய்த பணம் செலுத்திய பின் கொள்விலையைக் குறைத்துச் சீராக்குதல்.
2. கடன் கொடுத்தோருக்கு முற்பணம் வழங்குதல்.
3. கடனுக்கு கொள்வனவு செய்த பணம் வழங்கியதன் பின் காசோலை மறுக்கப்படுதல்.
4. கடனுக்கு கொள்வனவு செய்த பணம் வழங்கிய பின் வெளித்திருப்பம் இடம்பெறுதல்.
5. கடனுக்கு கொள்வனவு செய்த பணம் வழங்கிய பின் கழிவு பெற்று சீராக்குதல்
(………)

24. கமல், விமல் ஆகியோர் தலா ரூபா 400,000 மூலதனத்துடன் போக்குவரத்துச் சேவையொன்றினை ஆரம்பிப்பதற்காக பங்குடமை முயற்சியொன்றில் ஈடுபட்டு கனரக பேரூந்து ஒன்றினைக் கொள்வனவு செய்துள்ளனர். சேவையை ஆரம்பித்த மறுதினம் பேரூந்து துர்வதிஸ்ட வசமாக விபத்துக்குள்ளாகி முற்றாகச் சேதமடைந்தது. இவர்கள் இப்பேரூந்துக்கு முழுமையான காப்புறுதியினை மேற்கொள்ளாமல் மூன்றாம் நபர் காப்புறுதி யினை மட்டும் செய்துள்ளனர். கமல், விமல் ஆகியோரின் இலாப நட்ட விகிதம் முறையே 2:1 ஆக இருந்தபோதிலும் விபத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 1,200,000 ஆனது கமல், விமல் ஆகியோரிடையே முறையே ரூபா 400,000 ரூபா 800,000 எனப் பகிரப்பட்டுள்ளது. இதற்கான வலுவான காரணமாகக் கருதக்கூடியது யாதெனில்
1. கமல் இலாப உத்தரவாத பங்காளர்
2. கமல் வருமான உத்தரவாதமுள்ள பங்காளர்
3. கமல் முறிவடைந்த பங்காளர்
4. கமல் வரையறுத்த பங்காளர்
5. இங்கு காணர் எதிர்மறே வழக்கு தீர்ப்பு பின்பற்றப்படாமை

25. "முதல் வந்தது முதல் சென்றது" முறையினைப் பயன்படுத்தும் நிறுவனமொன்றில் 01.04.2011இல் ஆரம்ப இருப்பு 200 அலகுகள். இவை அலகொன்று ரூபா 25 ஆனவையாகும். இம் மாதத்தின் முதலாம் வாரத்தில் பெறப்பட்டவை அலகொன்று ரூபா 24 படி 300 அலகு களாகும். இரண்டாம் வாரம் பெறப்பட்டவை அலகொன்று 28 படி 200 அலகுகளாகும். மூன்றாம் வாரம் வழங்கப்பட்டவை 600 அலகுகள் ஆகும். இந்நிறுவனத்தின் 2011 ஏப்ரல் மாதத்துக்கான விற்பனைக் கிரயம் யாது?
1. ரூபா 12,800
2. ரூபா 15,000
3. ரூபா 15,300
4. ரூபா 27,800
5. ரூபா 28,100 (……….)

26. கணக்காண்டின் இறுதியில் நிறுவனமொன்றிடம் காணப்பட்ட மூன்று வகையான பொருட் தொகுதிகளின் விபரம் வருமாறு. இந்நிறுவனம் தொகுதி அடிப்படையில் இருப்புக்களை பெறுமதியிடுகின்றது.

பொருட் தொகுதி	இருப்பு கொள்வனவு கிரயம்	இருப்பின் மாற்றல் கிரயம்	ஏனைய செலவு கிரயம்	இருப்பின் மதிப்பிடப்பட்ட விற்பனைப் பெறுமதி	இருப்பின் மதிப்பிடப்பட்ட விற்பனைச் செலவு
A	3,200	1,800	1,000	6,200	400
B	1,800	1,200	600	3,800	100
C	2,700	1,800	500	5,800	400

இருப்பு தொடர்பான கணக்கீட்டு நியமத்திற்கமைய இருப்பின் பெறுமதியானது

1. ரூபா 13,400
2. ரூபா 14,830
3. ரூபா 14,600
4. ரூபா 14,400
5. ரூபா 7,700 (……..)

27. நிறுவனமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது 31.12.201இல் ரூபா 900,000 ஆகக் காணப்பட்டது. கடன்பட்டோர் பேரேட்டு பட்டியல் மீதியுடன் இணக்கம் செய்தபோது விற்பனை நாளேடு ரூபா 200,000 மிகையாகக் கூட்டப்பட்டதுடன் கடன்பட்டோர் ஒருவனின் மீதி ரூபா 50,000 பட்டியலில் இருந்து விடுபட்டுள்ளமையும் தெரிய வந்தது. தற்போதைய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு மீதி அடிப்படையில் ஐயக்கடனுக்கு 10% ஏற்பாடு செய்யப்பட்டு கணிக்கப்பட்ட தேறிய இலாபம் ரூபா 625,000 ஆக இருந்தது. தேவையான திருத்தங்களினை மேற்கொண்ட பின் வருடத்திற்கான தேறிய இலாபம் யாது?

1. ரூபா 645,000
2. ரூபா 650,000
3. ரூபா 445,000
4. ரூபா 450,000
5. ரூபா 500,000 (……..)

28. எல்லைக்கிரயவியல் நுட்பத்தில் பங்களிப்பு நிலையான கிரயத்துக்கு சமனாகக் காணப்படும் சந்தர்ப்பம் யாது?

1. மொத்த வருமானம் மொத்த செலவுக்கு சமனாகக் காணப்படும்போது
2. எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானத்துக்கும் சமப்பாட்டு புள்ளி விற்பனை வருமானத்துக்கும் இடைப்பட்ட வித்தியாசத்தில்
3. இலாபநட்டமற்ற புள்ளிக்கும் ஆரம்ப புள்ளிக்கும் இடைப்பட்ட இடத்தில்
4. மொத்த வருமானத்திலும் பார்க்க மொத்த செலவு குறைவாகக் காணப்படுகையில்
5. மொத்த வருமானத்திலும் பார்க்க மொத்தச் செலவு உயர்வாக் காணப்படுகையில்

(………)

29. இலங்கை கணக்கீட்டு நியமம் - 37 இன் வெளிப்படுத்தல்கள் என்படுபவை

1. ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவுகள்
2. ஆதனம், பொறி உபகரணம் தொடர்பான தேய்வு
3. நிகழத் தக்கவைகளும் ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகளும்
4. ஏற்பாடுகளும், நிகழத்தக்க பொறுப்புகளும், நிகழத்தக்க சொத்துகளும்
5. காசு உட்பாய்ச்சல்களும், காசு வெளிப்பாய்ச்சல்களும் (………)

30. விமல் கம்பனியின் ஊழியர் சம்பள விபரம் வருமாறு

- வாராந்தம் 40 மணித்தியாலம் வேலை நேரம்
- அடிப்படைச் சம்பளம் ரூபா 100 மணித்தியாலம் ஒன்றுக்கு
- மேலதிக நேரக் கொடுப்பனவு அடிப்படைச் சம்பளத்தில் 150%
- எல்லா ஊழியர்களும் தமது அடிப்படைச் சம்பளத்தில் 10% ஊழியர் சேம இலாப நிதிக்கும் தொழில் தருநர் ஊழியர் அடிப்படைச் சம்பளத்தில் 15% ஊழியர் சேம இலாப நிதிக்கும் 5% ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.
- ஒரு மாதத்துக்கான ஊழியர் சேவை விபரம் வருமாறு

சரத் 170 மணித்தியாலங்கள்
முகமட் 155 மணித்தியாலங்கள்
நந்தன் 160 மணித்தியாலங்கள்

நிறுவனத்தின் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு யாது?

1. ரூபா 1,440
2. ரூபா 1,455
3. ரூபா 1,425
4. ரூபா 4,750
5. ரூபா 2,375 (……..)

31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

31. பங்காளர்களின் உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

32. கணக்கீட்டில் காசு அடிப்படை நிலுவை அடிப்படை என்பவற்றுக்கிடையிலான பிரதான வேறுபாட்டைக் குறிப்பிடுக

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

33. விற்பனைக்குரிய நியமத்தன்மையினை அடையாத பொருட்களின் இருப்பினை எவ்வாறு பெயரிடுவர்?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

34. இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இற்கமைவாக ஐந்தொகை தினத்துக்கும் நிதிக்கூற்றுக்களை இயக்குநர் சபை அங்கீகரித்த தினத்துக்கும் இடையேயான ஐந்தொகை தினத்துக்கு பின்னரான நிகழ்வுகள் எச்சந்தர்ப்பத்தில் நிதிக்கூற்றுகளில் சீராக்கப்படும்?
எச்சந்தர்ப்பத்தில் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்படும்.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

35. இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கு அமைவாக கணக்கீட்டு கொள்கைகளிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளிலும் மாற்றம் செய்யக்கூடிய இவ்விரண்டு சந்தர்ப்பங்கள் தருக.

கொள்கை மாற்றம்

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

மதிப்பீட்டு மாற்றம்

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

36. இலங்கை கணக்கீட்டு நியமம் - 37 இற்கு அமைவாக அபிவிருத்தி செலவுகளை மூலதனச் செலவுகளாக மாற்றுவதற்காக நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் தருக.

……………………………………………………………………………………………….

……………………………………………………………………………………………….

37. முதலீட்டுத் தீர்மானத்தில் திரும்ப செலுத்தும் காலமுறையுடன் ஒப்பிடுகையில் தேறிய நிகழ்காலப் பெறுமதி முறையின் இரண்டு அனுகூலங்களைத் தருக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

38. பின்வரும் வரைபடமானது ஒரு கம்பனியின் விற்பனை வருமானம், உதவுதொகை, நிலையான கிரயம் என்பவற்றைக் காட்டுகிறது.



இங்கு A, B குறிப்பிடுவன யாவை?

A ……………………………………….. B ………………………………………..

39. சந்திரன் என்பவர் கோடை காலத்தில் குளிர்பானம் தயாரித்து பஸ்தரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்பவராவார். இவரது நாளாந்தக் கிரயம், விற்பனை, இலாபம் தொடர்பான தகவல்கள் வருமாறு

- நிலையான கிரயம் ரூபா 20
- மாறும் கிரயம் ஒரு குவளை குளிர்பானத்துக்கு ரூபா 2
- குளிர்பான விற்பனை 100 குவளைகள்
- இலாபம் ரூபா 200

இவ் இலாபத்தை உழைப்பதற்கு ஒரு குவளை குளிர்பானத்துக்கு எவ்வளவு விலை அறவிடல் வேண்டும்?

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

40. சிக்கன கட்டளைத் தொகையை தீர்மானிக்கும் இரண்டு வகையான கிரயங்களைக் குறிப்பிடுக.

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

41. வரையறுத்த வின்சன் கம்பனி பொறி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தது. இதன் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் 05 வருடங்களாகும். இழிவுப் பெறுமதி ரூபா 100,000 ஆகும். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அதன் கிரயத்தில் 18% பெறுமானத் தேய்விடப்பட்டது. மூன்றாம் ஆண்டின் ஆரம்பத்தில் இச்சொத்து மறுமதிப்பிடப்பட்டதனால் எழுந்த மிகை ரூபா 160,000 ஆகும். மூன்றாம் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு மறுமதிப்பீட்டுப் பெறுமதியில் 10% பெறுமானத் தேய்விடப்பட்டது. மூன்றாம் ஆண்டின் இறுதியில் பொறி இயந்திரங்கள் ஐந்தொகையில் முன்கொணரும் பெறுமதி ரூபா 720,000 ஆகும். இவ் இயந்திரங்களின் ஆரம்பக் கிரயம் யாது?

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

42. நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் சமர்ப்பித்தல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நோக்கங்கள் இரண்டு தருக.

1. ………………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………………

43. வரையறுத்த கம்பனியொன்றினால் வழங்கப்படும் பங்கொன்றுக்கான பிரதிபலன் பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு வழிகள் தருக.

1. ………………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………………

3. ………………………………………………………………………………………………

4. ………………………………………………………………………………………………

44. நடைமுறை, நடைமுறையல்லா சொத்துக்கள் என வகைப்படுத்துவதற்கான அடிப்படையை வழங்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் யாது?

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

45. வருமானப் பெறுவனவுகள் மூலதனப் பெறுவனவுகள் என்றால் என்ன? உதாரணங்கள் தருக.

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

46. கிரய முகாமை கணக்கீடு, நிதி கணக்கீடு தொடர்பாக பின்வரும் அட்டவணையினை பூர்த்தி செய்க.

	கிரய முகாமை கணக்கீடு	நிதி கணக்கீடு
அறிக்கைப்படுத்தப்படும் காலம்	……………………….	……………………….
சட்ட தேவைப்பாடு	……………………….	……………………….
தகவல்களைப் பயன்படுத்தும் தரப்பினர்	……………………….	……………………….

47. நபர் ஒருவர் வேலை 1 இனை முதலிலும் வேலை 2 இனை அதனைத் தொடர்ந்தும் செய்யும் ஊழியராவார்.

	வேலை 01	வேலை 02
ஒதுக்கிய மணித்தியாலம்	8	3
சேமித்த மணித்தியாலம்	2	இல்லை

ஒரு நாளுக்கான சாதாரண வேலை மணித்தியாலங்கள் 08, சாதாரண மணித்தியாலத்துக்கான கொடுப்பனவு ரூபா 100, மேலதிக வேலை நேரக்கொடுப்பனவு சாதாரண கொடுப்பனவின் 1 ½ மடங்கு, சேமித்த நேரத்துக்கான கொடுப்பனவு சாதாரண கொடுப்பனவில் ¾ பங்காகும். வேலை 1, வேலை 2 ஆகியவற்றிலிருந்து ஊழியர் உழைத்த வருமானத்தின் மொத்த கூலித்தொகை யாது?

The National e-learning Portal for The General Education

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

48. வரையறுக்கப்பட்ட லதாங்கி கம்பனியானது 31.03.2012இல் தனது இரு வேறுபட்ட காலங்களில் வழங்கியிருந்த கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தின் விபரம் வருமாறு

வழங்கல் விலை	பங்குகளின் எண்ணிக்கை
ரூபா 20	100,000
ரூபா 30	200,000

01.04.2012இல் பகிரப்படாது நிறுத்தி வைத்திருந்த ஒதுக்கங்களை மூலதனமாக்கிகளின் பொருட்டு 100,000 சாதாரண பங்குகள் ஒவ்வொன்றினதும் நியாயப் பெறுமதி ரூபா 50 ஆக உபகாரப் பங்கு வழங்கப்பட்டன. கம்பனியின் தற்போதைய கூறப்பட்ட பங்கு மூலதனத்தின் பெறுமதியையும் பங்கொன்றின் நிறையளித்த சராசரிப் பெறுமதியையும் கணிக்குக.

……………………………………………………………………………………………

49. நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் ஏனைய பகுதியினரின் சுதந்திரத்தைப் பேணும் வகையில் பதிவிடுவதற்கு அனுமதிக்கப்படும் கணக்கீட்டு எண்ணக்கரு யாது?

……………………………………………………………………………………………

50. தொழிற்சாலையொன்றின் செயற்பாட்டு மட்ட அலகுகள் 200 ஆக உள்ளபோது அலகு ஒன்றுக்கான நிலையான கிரயம் ரூபா 32 ஆக இருந்தது. செயற்பாட்டு மட்டம் குறைவடைந்த பொழுது அலகுக்கான நிலையான கிரயம் ரூப 40 ஆக அதிகரித்தது. ஆனால் மொத்தக் கிரயம் ரூபா 14,400 ஆக இருந்தது. இக்காலப் பகுதிக்கான மொத்த நிலையான கிரயத்தையும், அலகு ஒன்றுக்கான மாறும் கிரயத்தையும் கணிக்குக.

……………………………………………………………………………………………

The National e-learning Portal for The General Education

கணக்கீடு **வினாத்தாள் I** **விடைகள்**

1	-	3	11	-	4	21	-	1
2	-	5	12	-	2	22	-	2
3	-	4	13	-	3	23	-	3
4	-	4	14	-	5	24	-	4
5	-	5	15	-	2	25	-	2
6	-	2	16	-	4	26	-	4
7	-	2	17	-	2	27	-	3
8	-	4	18	-	1	28	-	1
9	-	4	19	-	1	29	-	3
10	-	2	20	-	4	30	-	5

31. மூலதன வட்டி, பங்காளர் சம்பளம், பங்காளர் பற்றுவட்டி, பங்காளர் நடைமுறைக் கணக்கு மீதிக்கான வட்டி

32. காசு அடிப்படை :- காசாகப் பெறப்பட்டவை, செலுத்தப்பட்டவை மட்டும் உள்ளடக்கியதாகும்.

    அட்டுறு அடிப்படை :- வருமானம் உழைக்கப்பட்டது செலவுகள் ஏற்பட்டு எழுந்தது என்றும் அடிப்படையை உள்ளடக்கியதாகும்.

33. நடைபெறு வேலை / குறைவேலை / வளரும் வேலை இருப்பு

34. ஐந்தொகை தினத்தில் உள்ள நிலைமைகளுக்கு சான்று பகரும் நிகழ்வுகள் நிதிக்கூற்றுகளில் சீராக்கப்படும்

    ஐந்தொகை தினத்தில் உள்ள நிலைமைகளுக்கு சான்று பகராத நிகழ்வுகளும், புதிய நிகழ்வுகளும் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்படும்.

35. கொள்கை மாற்றம்
    1. நியமம் ஒன்றின் தேவைப்பாட்டு அடிப்படை
    2. கொள்கை மாற்றத்தின் பின் முன்னரை விட நம்பகத்தன்மை கொண்டதாக தகவல்கள் வழங்கப்படக்கூடியதாக இருத்தல்.

    மதப்பீட்டு மாற்றம்
    1. புதிய தகவல் காரணமாக
    2. புதிய மேம்பாடுகள் காரணமாக

36. 1. செயற்திட்டத்துக்கு தெளிவான இறுதி எதிர்கால சந்தையிருத்தல்.
    2. வணிக உற்பத்தி கருத்தொன்றிருத்தல்.
    3. உற்பத்தியை முடிவுறுத்துவதற்கான தேவையொன்றிருத்தல்.
    4. உற்பத்தி செய்வதற்கான பொருளாதார வளம் இருத்தல்.
    5. கிரயம் நம்பகரமாக மதிப்பிடக்கூடியதாக இருத்தல்.

37. 1. எதிர்கால காசுப்பாய்ச்சல் பெறுமதிகளை நிகழ்காலப் பெறுமதிக்கு மாற்றுதல் (பணத்தின் காலப் பெறுமதியினைக் கருத்திற் கொள்ளல்)
    2. திரும்ப பெறும் காலத்துக்கு பின்னருள்ள காசுப் பாய்ச்சலை கருத்திற் கொள்ளல்.
    3. செயற்திட்டத்தின் முழு ஆயுட் காலத்திற்கான காசுப் பாய்ச்சல்களையும் கருத்திற்கொள்ளல்

38. A - அலகுக்கான இலாபநட்டமற்ற புள்ளி

    B - ரூபாவுக்கான இலாபநட்டமற்ற புள்ளி

39. இலாபம் + நிலையான கிரயம் = விற்பனை அலகு x உதவுதொகை

    இலாபம் + நிலையான கிரயம் = விற்பனை அலகு x (விற்பனை விலை - மாறும் கிரயம்)

    200 + 20 = 100 x (விற்பனை விலை – 2)

    விற்பனை விலை = 4.20 சதம்

40. 1. இருப்பு கட்டளைக் கிரயம்
    2. இருப்பு பராமரிப்புக் கிரயம்

41. 3ம் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு $= \frac{720,000}{90} \times 10$

= 800,000 ரூபா

மூன்றாம் ஆண்டின் ஆரம்பத்தில் பெறுமதி = 800,000 ரூபா

மறுமதிப்பீட்டுக்கு முன் பெறுமதி = 640,000 ரூபா

முதல் இரு ஆண்டுகளுக்கான பெறுமானத் தேய்வு வீதம் = 18%

ஆரம்ப கிரயம் $= \frac{640,000}{64} \times 100$

= 1,000,000 ரூபா

42. விளங்கிக் கொள்ளுதலினை உறுதிப்படுத்தல்
குறித்த வழிகாட்டல்களினை வழங்குதல்

43. - காசு
- வாக்குறுதிச் சீட்டு
- எதிர்கால சேவைகள்
- சொத்துக்கள் வேறு பிணைப்பத்திரங்கள்

44. இலங்கை கணக்கீட்டு நியமம் 01

45. வருமானப் பெறுவனவுகள் :- அன்றாட வியாபார நடவடிக்கையினால் உழைக்கப்பட்ட / உருவாக்கப்பட்ட வருமானங்களாகும். (உ+ம்) காசு விற்பனை, பெற்றதரகு.
மூலதனப் பெறுவனவுகள் :- அன்றாட வியாபார நடவடிக்கைகளுக்கு வேறாக மூலதன வடிவிலான கொடுக்கல் வாங்கல்களினால் உருவாக்கப்பட்ட வருமானங்களாகும்.
(உ+ம்) முதலீட்டு விற்பனையில் பெற்ற காசு, நிலையான சொத்து விற்பனையில் பெற்ற காசு

46.

	கிரய முகாமை கணக்கீடு	நிதி கணக்கீடு
1. அறிக்கைப்படுத்தப்படும் காலம்	குறுங்காலம்	ஒரு வருடம்/ குறித்த காலம்
2. சட்டத்தேவைப்பாடு	இல்லை	உண்டு
3. தகவல்களைப் பயன்படுத்தும் தரப்பினர்	உள்ளக மட்டம்	உள்ளக, வெளியக மட்டம்

47.

வேலை 01		வேலை 02	
எடுத்த நேரம்	6 x 100 = 600	எடுத்த நேரம்	2 x 100 = 200
சேமித்த நேரம்	2 x 75 = 150	மேலதிக வேலை நேரம்	1 x 150 = 150
	750		350

மொத்தக்கூலிக்கிரயம் 750 + 350 = 1100

48. கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்

20 x 100,000 = 2,000,000
30 x 200,000 = 6,000,000
50 x 100,000 = 5,000,000
13,000,000

பங்கொன்றின் நிறையளித்த சராசரிப் பெறுமதி $= \frac{13,000,000}{400,000}$

32.50 சதம்

49. வியாபார அலகுசார் எண்ணக்கரு

50.

அலகு	அலகுக்கான நிலையான கிரயம்	மொத்த நிலையான கிரயம்	அலகுக்கான மாறும் கிரயம்	மாறும் கிரயம்	மொத்தக் கிரயம்
200	32	6,400	50	10,000	16,400
160	40	6,400	50	8,000	14,400

மொத்த நிலையான கிரயம் ரூபா 6,400
அலகொன்றுக்கான மாறும் கிரயம் ரூபா 50